**நவம்பர் – 27**

# TNPSC துளிகள்

- பொது தொலைத்தொடர்பு சேவை வழங்கீட்டு நிறுவனமான BSNL ஆனது நாட்டின் முதல் நேரடி செயற்கைக் கோள் – கைபேசி இணையதளச் சேவையை அறிமுகப் படுத்தி உள்ளது.
- தகவல் பரிமாற்ற சமிக்ஞை கோபுரப் பாகங்கள் மற்றும் பசுமையக அறைகள் போன்றவற்றிற்கு செலுத்தப்படும் வரிகளுக்கான பற்று வரவினைப் பெறுவதற்கான கோரல்களை உச்ச நீதிமன்ற விதி உறுதிப்படுத்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பட்டியலிடப்பட்ட செயலி அடிப்படையிலான உணவு விநியோக நிறுவனமான சோமாட்டோ, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதி முதல் மும்பை பங்குச் சந்தையின் (BSE) சென்செக்ஸ் தர வரிசையில் JSW ஸ்டீல் நிறுவனத்திற்குப் பதிலாக இடம் பெற உள்ளது.
- 130 ஆண்டு கால வரலாற்றில், இந்தியா முதல் முறையாக சர்வதேசக் கூட்டுறவு கூட்டணியின் (ICA) மாநாட்டினை நடத்த உள்ளது.
- இந்திய இராணுவம் ஆனது, குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் நகரில் பலதரப்பு வருடாந்திர கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியது.
- முதலாவது 'சாகர்மந்தன் – பெருங்கடல்' என்ற பேச்சுவார்த்தையானது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- இந்தியாவின் இணையவெளிப் பாதுகாப்பு திறன்களைத் மேம்படுத்துவதற்காக என்று தேசியப் பாதுகாப்பு சபை செயலகம் மற்றும் இராஷ்ட்ரிய இரக்சா பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் பாரத் தேசிய இணையவெளிப் பாதுகாப்பு பயிற்சி (பாரத் NCX 2024) ஆனது ஏற்பாடு செய்யப்பட்டது.
- நாகாலாந்தின் 25வது இருவாட்சிப் பறவைத் திருவிழாவிற்கான ஒரு பங்குதார நாடாக வேல்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக பெருவும் அறிவிக்கப் பட்டு உள்ளது.
- ஆர்மேனியா நாடானது சர்வதேச சூரியசக்திக் கூட்டணியின் 104வது முழுமையான ஒரு உறுப்பினராக மாறியுள்ளது.
- இந்தியச் சிறுபான்மைச் சமூகங்களின் உறுப்பினர்களால் தொடங்கப்பட்ட ஓர் அமெரிக்க அரசு சாரா நிறுவனமானது, இந்தியப் பிரதமருக்கு 'டாக்டர். மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர். சிறுபான்மையினர் மேம்பாட்டிற்கான உலக அமைதி விருதினை (நேரில் வாரா நிலையில்) வழங்கியுள்ளது.


# தமிழ்நாடு செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பதிவான பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம்

- ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 45.5 ஆக இருந்த தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 39.4 ஆகக் குறைந்துள்ளது.
- 1,000 பிறப்புகளுக்கு 8.2 ஆக இருந்த பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பு விகிதம் (IMR) ஆனது 7.7 ஆகக் குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதமானது

ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 73 ஆக இருந்த நிலையில், இது 2021-22 ஆம் ஆண்டில் 90.5 ஆகவும்; மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 52 ஆகவும் இருந்தது.

- 2020-21 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 9.7 என்ற அளவில் பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பு விகிதம் இருந்த நிலையில் இது 2021-22 ஆம் ஆண்டில் 10.4 ஆகவும்; மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 10.2 ஆகவும் இருந்தது.



**MORTALITY RATES**

| | MMR per 1lakh births | IMR per 1000 live births |
|---|---|---|
| 2020-21 | 73 | 9.7 |
| 2021-22 | 90.5 | 10.4 |
| 2022-23 | 52 | 10.2 |
| 2023-24 | 45.5 | 8.2 |
| 2024* | 39.4 | 7.7 |
| TIRUVALLUR 2024* | 26 | 5.7 |

* Until Oct

# தேசியச் செய்திகள்


## கிழக்கத்திய கடல் சார் வழித்தடம்




- சென்னை-விளாடிவோஸ்டாக் கிழக்கத்திய கடல் சார் வழித்தடம் ஆனது எண்ணெய், உணவு மற்றும் இயந்திரங்கள் அடங்கிய சரக்குப் பொருட்களின் போக்குவரத்திற்கு உதவும் வகையில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
- இதன் மூலம் இந்தியாவிற்கும் தொலை தூரக் கிழக்கு ரஷ்யாவிற்கும் இடையே சரக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான காலம் 40 நாட்களிலிருந்து 24 நாட்களாக குறைந்துள்ளது.
- இது போக்குவரத்துத் தொலைவினை 40% வரை குறைத்துள்ளது.
- இது ஜப்பான் கடல், கிழக்கு சீனக் கடல், தென் சீனக் கடல், மலாக்கா நீர்ச் சந்தி, அந்தமான் கடல் மற்றும் வங்காள விரிகுடா வழியாக செல்கிறது.

- கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித் தடத்தில் (IMEEC) இந்தியா மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் இணைந்து செயல்பட உள்ளன.

## "Jobs at Your Doorstep" அறிக்கை





- மத்திய அரசானது, இந்தியாவில் உள்ள ஆறு மாநிலங்களை உள்ளடக்கிய ‘Jobs at Your Doorstep: A Jobs Diagnostics for Young People - வீடு தேடி வேலைவாய்ப்புகள்: இளையோர்களுக்கான வேலைவாய்ப்புகளைக் கண்டறிதல்’ என்ற ஒரு தலைப்பிலான உலக வங்கி அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, திறன் இடைவெளி பகுப்பாய்வு ஆகும் என்ற நிலையில் இது பள்ளிகள் இருக்கும் மாவட்டங்களின் பள்ளித் தொழில் துறை சார்ந்தத் தேவைகளில் வழங்கப்படும் வர்த்தகங்களைச் சீரமைக்க முயற்சிக்கிறது.
- இது மாநிலங்களுக்கான பயிற்சி - கற்றல் மற்றும் தேர்வு முடிவுகளை வலுப்படுத்துதல் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள இமாச்சலப் பிரதேசம், கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் இராஜஸ்தான் ஆகிய ஆறு மாநிலங்களில் மிக கவனம் செலுத்துகிறது.
- இது அடித்தட்டு முதல் மேல்மட்டம் வரையிலான திறன் மேம்பாட்டு அணுகுமுறையை ஊக்குவிப்பதோடு இது உள்ளூர்ச் சந்தை சார்ந்தப் பயிற்சியை வலியுறுத்துகிறது.
- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் கீழ் 2025 ஆம் ஆண்டில், சுமார் 50% மாணவர்களும், மேலும் 2030 ஆம் ஆண்டில் சுமார் 100% மாணவர்களும் திறன் சார் கல்விக்கான அணுகலைப் பெறுவர்.

## 'One Day One Genome'

- உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT) ஆனது, இந்தியாவின் நுண்ணுயிர் திறனின் பயன் மயத்தினை வெளிப்படுத்துவதற்காக 'One Day One Genome - ஒரு நாள் ஒரு மரபணு' என்ற முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு விரிவான விளக்க அறிக்கை, தகவல்களை உள்ளடக்கிய வரைகலைகள் மற்றும் மரபணுத் தரவுகளுடன் கூடிய, இந்தியாவில் இருந்து முழுமையாக விளக்கப்பட்ட பாக்டீரிய மரபணுவினைப் பொது வெளியில் வெளியிடுவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டு ள்ளது.
- ஓர் உயிரினத்தின் மரபணு என்பது நியூக்ளியோடைடு என்ற தளங்களால் ஆன டிஎன்ஏ

அல்லது ஆர்என்ஏவின் தனித்துவமான வரிசையைக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## சுற்றுலாத்துறையில் மேம்படுத்தப்பட்ட பருவநிலை மீதான நடவடிக்கை குறித்த பிரகடனம்




- இந்த முன்னெடுப்பானது, COP 29 மாநாட்டின் தலைமையான அஜர்பைஜான் என்ற நாட்டினால் முன்னெடுக்கப் பட்டது.
- இது உலகளாவியச் சுற்றுலாத் துறையைப் பருவநிலை-எதிர்ப்புத் திறன் கொண்ட, குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட தொழில் துறையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுற்றுலாத்துறையில் மேம்படுத்தப்பட்ட பருவநிலை நடவடிக்கைக்கான COP 29 மீதான பிரகடனத்திற்கு 50க்கும் மேற்பட்ட நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.
- உலகளாவிய உமிழ்வுகளில் (நேரடி மற்றும் மறைமுக ரீதியில்) 8.8% பங்கினைச் சுற்றுலாத் துறை கொண்டுள்ளது.

## பண்டா ஆச்சே அறிக்கை

- இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே என்ற நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் யுனெஸ்கோ அமைப்பானது ஒரு செயல்திட்டத்தினை வெளியிட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் சுனாமியை எதிர்கொள்வதற்கு 100% தயாரான கடலோரச் சமூகங்களை உருவாகும் ஒரு இலக்கினை அடைவதை இது நோக்கமாகக் கொண்டு ள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் இந்த இலக்கை அடைய முதலீடுகளை நன்கு விரைவுபடுத்துமாறு

மாநிலங்கள் மற்றும் குடிமை சமூகத்திற்கு இந்த முன்னெடுப்பு அழைப்பு விடுக்கிறது.

- சுமார் 30க்கும் மேற்பட்ட நாடுகள் இதன் மூலம் பயனடைந்துள்ளன என்பதோடு மிக முக்கியமான முன் எச்சரிக்கை அமைப்புகள் இதன் மூலம் நிறுவப்பட்டுள்ளன.
- தற்போது, சுமார் 700 மில்லியன் மக்கள் சுனாமியின் பாதிப்புக்குள்ளாகும் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்றனர் என்ற நிலைமையில் இது 2050 ஆம் ஆண்டில் 1 பில்லியனை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது, தனது இந்தியப் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மற்றும் தணிப்பு அமைப்பை உலகளவில் மிக அதிக சுனாமி ஆபத்துள்ள பகுதிகளிலும் அதன் சேவையினை வழங்கும் விதமாக விரிவுபடுத்தியுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## GSAT-20 செயற்கைக்கோள்




- GSAT-N2 அல்லது GSAT-20 என்பது 4,700 கிலோ எடையுள்ள செயற்கைக் கோளான இது இந்தியாவின் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விண் ஏவு வாகனங்களின் செலுத்தும்

திறனை விஞ்சும் வகையிலானதாகும்.

- இதனை விண்ணில் ஏவுவதற்கு என்று ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ஏவு வாகனமானது அமெரிக்காவின் கேப் கனவரல் என்ற இடத்தில் பயன்படுத்தப்பட்டது.
- இந்த செயற்கைக்கோள் ஆனது சுமார் 14 ஆண்டுகள் விண்ணில் ஆய்வு மேற்கொள்ள உள்ளது.
- இது இந்தியா முழுவதும் மற்றும் அதன் தொலைதூரப் பகுதிகளிலும் அத்தியாவசிய இணையம் மற்றும் தகவல் தொடர்புச் சேவைகளை வழங்கும்.
- இது இந்தியப் பகுதி முழுவதும் அகலப்பட்டை அலைவரிசை மற்றும் விமானப் போக்குவரத்தின் போதான இணைய சேவை இணைப்பை மேம்படுத்தும்.
- ஒரு இந்திய விண்வெளி வீரரை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) அனுப்பச் செய்வதற்காக ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் இஸ்ரோ ஆகியவை சுமார் 60 மில்லியன் டாலர் மதிப்பிலான மற்றொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

## பைனார் செயற்கைக்கோள்கள்




- கர்டின் பல்கலைக்கழகத்தின் பைனார் விண்வெளித் திட்டத்தின் மூலம் விண்ணில் ஏவப்பட்ட மூன்று சிறிய ஆஸ்திரேலிய நாட்டுச் செயற்கைக்கோள்கள் பூமியின் வளி மண்டலத்தில் தீப்பற்றி எரிந்தன.
- இந்த கியூப்சாட்கள் (பைனார் - 2, 3 மற்றும் 4) ஆனது புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் (மேற்பரப்பில் இருந்து 2,000 கிலோ மீட்டருக்கும் குறைவாக) நிலைநிறுத்தப்பட்டது.
- அவை எதிர்பார்த்ததில் மூன்றில் ஒரு பங்கு காலமான இரண்டு மாதங்கள் மட்டுமே அந்நிலையில் நீடித்தன.
- இந்தச் சம்பவம் ஆனது சமீபத்தில் பதிவாகி வரும் மிக அதிக சூரியச் செயல்பாட்டின் தற்போதைய போக்கைக் குறிப்பிடுகிறது.
- இச்சூரியச் செயல்பாட்டில் சூரியக் கரும்புள்ளிகள், சூரியச் சுடர்கள் மற்றும் சூரியக் காற்றானது பூமியை நோக்கிப் பாயும் மின்னூட்டப்பட்ட துகள்களின் ஓட்டம் - போன்ற நிகழ்வுகள் அடங்கும்.

## இயக்கவியல் அடிப்படையிலான முதல் கியூபிட்ஸ்


- இயற்பியல் ஆய்வாளர்கள் இயக்கவியல் அடிப்படையிலான முதல் கியூபிட்ஸ்களை உருவாக்கியதன் மூலம் துளிமக் கணினி தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்து

உள்ளனர்.

- இயக்கவியல் அடிப்படையிலான கியூபிட்ஸ்கள் ஒரே நேரத்தில் பல நிலைமைகளில் செயல்படக் கூடிய சிறிய அமைப்புகள் ஆகும்.
- அவை மின்னணு நிலைகளை விட அதிர்வு நிலைகளை அதிகம் சார்ந்துள்ளன.
- இந்தப் பண்பு ஆனது நீண்ட ஒத்திசைவு நேரங்களை பெற வழிவகுக்கிறது.
- மிகவும் வழக்கமான மின்காந்த கியூபிட்ஸ்கள் பெரும்பாலும் சில குறுகிய ஒத்திசைவு நேரங்களைக் கொண்டிருப்பதால், அவை அவற்றின் பயன்பாடுகளை மிகவும் நன்கு கட்டுப்படுத்துகின்றன.
- இயக்கவியல் அடிப்படையிலான கியூபிட்ஸ்கள் மிக நீண்ட ஒத்திசைவு நேரங்களை வழங்குவதனால் இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்ய உதவும்.



## கேண்டிடேடஸ் பைட்டோபிளாஸ்மா




- எள் வயல்களில் ஏற்பட்டு வரும் ஒரு மிக விசித்திரமான நோய்க்கான காரணியாக கேண்டிடேடஸ் பைட்டோபிளாஸ்மா இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த நோய் ஆனது செடிகளில் பெரும் குறைபாட்டையும், பசுமை நிறம் பெறும் ஒரு

தன்மையினையும் ஏற்படுத்தி, அவற்றின் விளைச்சலைப் பாதிக்கிறது.

- இந்த நோய்க்கு 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்திய அறிவியலாளர்களால் "விட்ச்ஸ் ப்ரூம்" என்று பெயரிடப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மர்மமான மெல்லுடலி


- பெருங்கடலின் ஒரு இருள் சூழ் மண்டலத்திற்குள் ஒளிரும் "மர்ம மெல்லுடலி" ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- பாதிடெவியஸ் காடாக்டைஸ் என்று பெயரிடப்பட்ட இந்த உயிரினம் ஆனது ஓர் ஆப்பிளின் அளவை ஒத்திருக்கிறது.
- இது கடல் அட்டை என நன்கு வகைப்படுத்தப்பட்டாலும், இந்த கடல் விலங்கினமானது இதற்கு முன் எந்த அறிவியலாளர்களாலும் காணப்பட்ட கடல் அட்டைகள் போன்று இல்லை.
- இந்த இருள் சூழ் மண்டலமானது கடலின் மேற்பரப்பிலிருந்து 1,000-4,000 மீட்டர்களுக்கு இடையே இருக்கும் ஆழகடல் பகுதி என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இம்மண்டலம் கடல்நீரில் கிட்டத்தட்ட 70% ஆகும்.



## சைகா மறிமானின் பாதுகாப்பு நிலை


- IUCN அமைப்பானது தனது செந்நிறப் பட்டியலில், அருகி வரும் நிலையில் உள்ள இந்த உயிரினத்தின் பாதுகாப்பு நிலையை எளிதில் பாதிக்கப்பட கூடிய ஒரு உயிரினமாக மேம்படுத்தியுள்ளது.
- இவை மத்திய ஆசியாவின் புல்வெளிகள் மற்றும் மித வறண்டப் பகுதிகளை அதன் பூர்வீகமாகக் கொண்டவை.
- இந்தப் பழங்கால இனம் ஆனது பனி யுகத்திலிருந்து பூமியில் வாழ்ந்து வருகிறது.
- 2003 ஆம் ஆண்டில், கஜகஸ்தான், மங்கோலியா, ரஷ்யா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்த மென்மையான தட்டை வடிவ மூக்கு கொண்ட குளம்புக் கால் உயிரனங்கள் வெறும் 6 சதவிகிதம் மட்டுமே இருந்தன.

- யூரேசியா முழுவதும் தற்போது 1.9 மில்லியன் சைகா மறிமான்கள் உள்ளன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக எரிசக்தி துறை சார் வேலைவாய்ப்பு அறிக்கை 2024




- சர்வதேச எரிசக்தி முகமையானது 2024 ஆம் ஆண்டு உலக எரிசக்தி துறை சார் வேலை வாய்ப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், எரிசக்தித் துறையானது சுமார் 2.5 மில்லியன் அளவிற்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியதோடு, அந்தத் துறையில் உள்ள மொத்த வேலைவாய்ப்பு எண்ணிக்கையை 67 மில்லியனுக்கும் அதிகமாக உயர்த்தியது.
- சுமார் 3.8% என்ற இந்த வளர்ச்சி விகிதம் ஆனது 2.2% என்ற உலகச் சராசரியினை விட அதிகமாக உள்ளது.
- புதைபடிவ எரிபொருள் மீதான முதலீடுகள் 9% அதிகரித்துள்ளது.
- சீனா, உலகளாவிய மின்சார வாகனத் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் 68% மற்றும்

சூரிய ஒளி மின்னழுத்தம் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் சுமார் 84% பங்கினைக் கொண்டு ள்ளது.

- இந்தியாவில், எரிசக்தி துறை சார்ந்த வேலைவாய்ப்புகள் 8.5 மில்லியனுக்கும் அதிகம் ஆனவை அல்லது 2023 ஆம் ஆண்டில் பதிவான மொத்த வேலைவாய்ப்பில் 1.5% (566 மில்லியன்) ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★